எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Rg.No.S.159 of 25-8-1965

மலர் – 23 இதழ் – 04, 05. ஏப்ரல் – ஜுலை, 2008 விலை ரூபா 10/-





மகாத்மா காந்தி அடிகளின் 60வது சிராத்த தினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் அனுஷ்டிக்கப்பட்டபோது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச்சிலைக்கு சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் சிவநேயர் இ.தவகோபால் மலர் மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும், சங்க அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள காந்தி உருவப்படத்திற்கு உப தலைவர் அ.இராமநாதன் மலர்மாலை அணிவிக்கும்போது செயளாளர் க.இராசரத்தினம் அருகில் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். ஜனவரி 30, 2008.

## காந்தி நினைவு – சர்வோதயம், ஜனவரி 30, 2008

(யாழ். நிருபர்)

இன, மதவெறி கொண்ட ஒருவனால் சுதந்திர இந்தியாவின் சிற்பி சுட்டுக்கொல்லப்பட்ட தினம், நாம் வேற்றுமைகளைக் கைவிட்டு சமாதான வழியைப் பின்பற்ற உறுதி கொள்ள வேண்டிய தினமாகும்.

தனி மனித மனம், குடும்பம், கிராமம், நாடு எங்குமே குழு வேற்றுமைகளும் பூசலும் தலை தூக்கி நிற்கும் இந்நாட்களில் பழைய மனித நேயப்பண்புகள் எல்லாம் சமூகத்தை விட்டு விலகி விலகிச் செல்வதைக் கண்டும் சமூக நலன் விரும்பிகள் இளம் தலைமுறையினருக்கு அமைதி மிக்க ஒரு உலகத்தை விட்டுச் செல்ல முயற்சி செய்யாது இருப்பது வருத்தத்திற்குரியது.

1927 முதல் 1956 வரை காந்திய நெறி ஆசிரியர்களாலும், சமூகத்தின் சாரமான கற்றோர் கூட்டத்தாலும் முன்னெடுக்கப்பட்டது. இன்று அவர்கள் எல்லோரும் வெள்ளம் ஓடும் பக்கத்தால் அள்ளுப்படுகிறார்கள். இளம் தலைமுறை கிரிக்கெட், சினிமா, கைத்தொலைபேசி என்று புதிய கலாசாரத்தை இறுகப்பிடித்துக் கொள்கிறார்கள். "நாம் எங்கு செல்கிறோம்" என்ற வினாவுக்கு எவரும் விடைத்தேடத் தயங்குகிறார்கள். இளைஞர் போக்கை "இழுத்துத் தடுப்போம்" என்று சொல்ல எவருக்கும் துணிவில்லை. மு.வரதராசன் இப்படி ஒரு நூலை எழுதினார் என்று கேள்விப்பட்ட ஆசிரியத் தலைமுறை இன்று அருகி வருகிறது. உயரிய விழுமியங்கள் இவை எனக் கோடிட்டுக் காட்ட வல்லவர்கள் தாம் இறக்குமுன், தம் குறிக்கோள்களைத் தழுவும் ஒரு சிறு குழாத்தையேனும் உருவாக்கி விடுதல் அவசியம்.

இவ்வாறு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன் காந்தி நினைவு தினத்தில் வெகுமன உளைச்சலுடன் குறிப்பிட்டார்.

"அரிச்சந்திரன் நாடகம் ஒரு இளம் காந்தியை மனம் மாற்றியது என்றால் எம் சினிமா வல்லுனர்கள் எதைச் சாதிக்கிறார்கள்?" எனக் கேள்வி எழுப்பினார் மற்றொரு அன்பர்.

யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியிலுள்ள காந்திஜி உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்த சங்க உறுப்பினர்கள் "காந்தி நிலையம்" சென்று நினைவுக் கூட்டத்தை நடத்தினர். உபதலைவர் அ.இராமநாதன் தலைமை தாங்கினார். இம்முறை இளம் தலைமுறையினர் சிலர் உறுப்பினராய்ச் சேர்ந்தனர். நம்பிக்கை ஒளி தளிர்விடுகிறது.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# காந்தியின் சுதந்திரப்போராட்டம்

காந்தித் தாத்தா என அனைவராலும் அழைக்கப்படும் காந்தியடிகள் பற்றி யாரும் அறியாதிருக்க முடியாது. காந்தியடிகளின் முழுப்பெயர் மோகனதாஸ் கரம் சந்காந்தி. தாயின் பெயர் புத்லிபாய். தந்தையின் பெயர் கரம் சந்காந்தி. சிறு பராயத்திலேயே காந்தி சிறந்த ஒழுக்க நெறிகளுடன் வாழ்ந்தார். தாய் தந்தையரிடம் சிறந்த பக்தி கொண்டு விளங்கினார். அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து தானும் உண்மை பேசுவது என உறுதி பூண்டு அதன்படி வாழ்ந்தும் காட்டினார். அவர் தமது 13ம் வயதில் கஸ்தூரிபாயை திருமணம் செய்தார். இங்கிலாந்து சென்று படித்து வழக்கறிஞரானார்.

1915 ஜனவரி மாதம் இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி போராட்டம் நடத்தி வந்தது. காந்தியடிகளும் இந்தப் போராட்டத்தில் இறங்கினார். ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக கதர் இயக்கத்தை தொடங்கினார். தானும் கதர் ஆடைகளையே அணிந்து மக்களையும் அணியத் தூண்டினார். தீண்டாமை எனும் சமூகத்திலிருந்த கொடிய நோயை ஒழிக்கப்பாடுபட்டார். கிராமக் கைத்தொழில்களிற்கு புத்துயிரளித்தார். தியாகச் செம்மலாக வாழ்ந்து காட்டினார். இவ்வாறு இவருடைய அரிய சேவைகளைக் கண்ட மக்கள் இவரை மகாத்மா எனப் போற்றினர்.

போராட்டத்தின் போது கூட அவர் கத்தியின்றி, இரத்தமின்றித் தான் யுத்தத்தை நடத்தி வெற்றி கண்டார். இப்போராட்டத்தின் அங்கமாக முக்கியமானது சத்தியாக் கிரகமாகும். அதாவது அன்பை அடிப்படையாகக் கொண்டு பகைவனையும் நேசித்து பலாத்காரத்தில் ஈடுபடாமல் கொடுமைகளை அகற்ற உழைப்பதே சத்தியாக்கிரகத்தின் அடிப்படையாகும். தென்னாபிரிக்காவில் வாழ்ந்து வந்த இந்தியர்களை அங்கிருந்த வெள்ளையர் மட்டுமின்றி வெள்ளையர் அரசாங்கமும் இழிவாகவே நடத்தியது. இந்த அநீதியைப் போக்க காந்தியடிகள் உறுதி பூண்டார். இந்தியருக்கு எதிரான சட்டங்களை எதிர்த்து 21 ஆண்டுகள் போராட்டம் நடத்தினார்.

ஆங்கிலேயர் 1919 இல் இந்தியர்களை மேலும் அடக்கி ஆளப் பல சட்டங்களைக் கொண்டு வந்தனர். இதை எதிர்த்து நாடு முழுவதும் பெருங்கிளர்ச்சியை இவர் தொடங்கினார். பிரிட்டிஷ்ஷார் அடக்கு முறையை கையாண்டார்கள். பொலீசையும் படையையும் ஏவிப் பல மக்களை சுட்டுக் கொன்றார்கள். இதனால் ஆங்கிலேயரின் நேர்மைக் குணத்தில் நம்பிக்கையிழந்த காந்தியடிகள் பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்காமல் இருக்க 1920 செப்டெம்பர் மாதம் இயக்கத்தைத் தொடங்கினார். ஆனால் எழுச்சி கொண்ட மக்கள் சில இடங்களில் வன்முறைச் செயல்களில் இறங்கியதால் இவர் அவ்வியக்கத்தை நிறுத்த நேர்ந்தது. வன்செயல்களுக்கு வருந்தி ஐந்து நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

1924 இல் நாட்டில் பல இடங்களில் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. அவற்றை நிறுத்துவதற்காக காந்தியடிகள் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். 1932 இல் ஹரிஜன மக்களை இந்து சமூகத்திலின்றும் பிரித்து தேர்தலில் தனித் தொகுதியாக்க அரசு முயன்றது. இதை எதிர்த்து இவர் மீண்டும் உண்ணாவிரதம் இருந்தார். இதனால் அரசு தன் திட்டத்தைக் கைவிட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. 1942 ஆகஸ்ட் 8 இல் "வெள்ளையனே வெளியேறு" எனும் இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினார். இதனால் காந்தியடிகளையும் மற்றத் தலைவர்களையும் அரசாங்கம் சிறையில் அடைத்தது. இவருடன் சிறையிலிருந்த மனைவி கஸ்தூரிபாய் 1944 பெப்ரவரி 22ம் திகதி சிறையிலேயே காலமானார். 1945 இல் காந்தியடிகளும் ஏனைய தலைவர்களும் விடுதலையாயினர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பிரிட்டனில் நடந்த தேர்தலில் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதை ஆதரிக்கும் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றது. இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட காந்தியடிகள் இந்தியாவின் தேசபிதாவாகப் போற்றப்படுகிறார். இன, மத, மொழி, வர்க்க, சாதி பேதங்களைக் கடந்து அனைவரையும் சமமாகப் பார்த்த அடிகளாரின் வாழ்வைப் பின்பற்றி எவ்வுயிர்க்கும் தீங்கிழையாமல் வாழ்வதே நாம் அன்னாருக்குச் செய்யும் மிகப் பெரிய கைமாறாக இருக்க முடியும்.

**M.நிரோஜா**
A/L (2008) வர்த்தகப்பிரிவு
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
மன்னார்.

**படிப்பினை**

சொன்ன சொல்லை காந்தியைப் போல் காக்க வேண்டும்
சோம்பலதை காந்தியைப் போல் துறக்க வேண்டும்
மன்னவனோ பின்னெவனோ காந்தியைப் போல்
மனித ரெல்லாம் சமமென்று மதிக்க வேண்டும்
சின்னவரோ கிழவர்களோ எவரை யேனும்
சிறுமையின்றி காந்தியைப் போல் சிறப்புத் தந்து
என்ன குறை எங்கு வந்தீர் எனக் கேட்டு
இன்முகமாய் குலவுகின்ற எளிமை வேண்டும் (தொடரும்)

நாமக்கல் கவிஞர் அவர்களின்
"காந்தி அஞ்சலி"
என்னும் நூலிருந்து எடுக்கப் பெற்றது.

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 139, ஏப்ரல் - ஜுலை - 2008

## சத்தியாக்கிரகமும் அஹிம்சையும்

இன்று ஜனநாயகம், மனித உரிமை, சமாதானம் பற்றி அதிகமாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. உலகெங்கும் பரவிவருகின்ற வன்முறையும் மோதல்களும் மனிதகுலத்தின் இயல்பான வாழ்வுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. சமுதாயத்தின் அடிப்படை அலகான குடும்பத்தில் உருவாகும் பிரச்சினைகளின் தோற்றம் இனங்களுக்கிடையிலான பிணக்குகளுக்கும் நாடுகளுக்கிடையிலான போர்களுக்கும் அடிப்படைக் காரணியாக அமைகின்றது என்கிறது சமூகவியல். எமது நாட்டிலும் உள்நாட்டு யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளிலும் முகாமிட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கியமான வேலைத்திட்டமாக இருப்பதும் சமூகமட்டத்தில் தோன்றுகின்ற வன்முறைக் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி இடுவதும் மக்களை அபிவிருத்தி நோக்கிய திட்டங்களில் வலுவூட்டுதலும் ஆகும்.

மகாத்மா காந்தியின் அமைதி முறையிலான போராட்டப் பாதையே பிணக்குகளைத் தீர்ப்பதற்கான சரியான வழி என்று மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளும் அவர்களின் முகவர்களும் போதித்து வருகின்ற இன்றைய சூழலில் அகிம்சை, சத்தியாக்கிரகம் என்ற அண்ணலின் போராட்ட மார்க்கங்கள் உலக அமைதிக்கு வித்திடும் என்று உறுதியாக நாம் நம்புகின்றோம்.

இவ்வேளையில் "மகாத்மாவை நினைவு கூரல்" என்ற தலைப்பில் வெளியான 31 ஜனவரி 2008 ஆந்திகதிய 'தினக்குரல்' பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் எமது கவனத்தை ஈர்க்கின்றது. மகாத்மாவின் 60 ஆவது நினைவு தினத்தையொட்டி பிரசுரமான அத்தலையங்கம் காந்தி உலகிற்கு அறிமுகஞ் செய்த சத்தியாக்கிரகம் என்ற அகிம்சைக் கோட்பாடும் போராட்ட வடிவமும் இன்றைய உலகிற்கு எந்தளவிற்குப் பொருத்தமானதாக இருக்கின்றது என்பதை ஆய்வு செய்கிறது. வாதப்பிரதி வாதங்களுக்கப்பால் இன்றைய சூழலில் இவ்வாறானதொரு விடயத்தை முதன்மைப்படுத்தியமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அக்டோபர் 2 ஆம் திகதியை சர்வதேச அகிம்சை தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்ததை முன்னிட்டு இந்தியாவில் நடைபெற்ற விழாக்களில் கலந்து கொண்ட இந்தியத்தலைவர்களும் உலகப் பிரமுகர்களும் காந்தியின் அகிம்சைக் கோட்பாடு வன்முறைகள் நிறைந்த இன்றைய உலகிற்குப் பொருத்தமானதே என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தனர் எனக் கூறும் ஆசிரியர், அதன் நடைமுறைச் சாத்தியத்தன்மை குறித்து அதாவது வன்முறைகளுக்கு மத்தியில் அகிம்சையை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதில் பயனுறுதியுடைய விளைவைப் பெறமுடியுமா என்ற வினாவையும் தொடுத்துள்ளார்.

இதற்கு நாம் விடைதேட முற்படுகையில் அண்ணலின் அகிம்சை பற்றிய கூற்றே மிகத் தெளிவான பதிலாக அமைகிறது. அதாவது "அஹிம்சா தத்துவம் ஒரு நாட்டை பரிசுத்தமான ஜனநாயகத்தில் கொண்டு போய்விடும். அஹிம்சைப் போர் கூர்மையான வாளைவிடப் பயங்கரமானது" என்றும் "சத்தியாக்கிரகம் என்பது எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு நியதி" என்றும் மகாத்மா கூறுகிறார்.

பரிசுத்தமான ஜனநாயகம் நிலவும் போது அங்கு வன்முறை என்ற பேசுக்கே இடமிருக்காது என்பதையும் அடிகளாரின் அன்பு நெறியும் அறநெறியும் உலக அமைதிக்கு வழி சமைக்கக் கூடியன என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

- எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

## காந்தீயத்திற்கு ஒரு வாழ்த்து

காந்தியைப் பற்றி எழுத முனைந்தால் அது எல்லை அற்ற கடலினைப் போல் பரந்த ஒரு பொக்கிஷம். இருந்தாலும் என்னால் சிலவார்த்தைகள் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்று உலகமே தலை வணங்கி நிற்கின்ற ஒரு மாமனிதர் காந்தி. அவர் விட்டுச் சென்ற படிப்பினைகள் ஏராளம். அவருடைய போராட்டத்தின் இலட்சியத்தைக் கடைப்பிடிக்க முயற்சிக்கிறேன். என்னால் முடியவில்லை. இதனால் தான் உங்களுடன் இணைய ஆசைகொண்டேன். வாழ்க்கையில் பல துன்பங்களைக் கண்டுவிட்டேன். (சொல்ல முடியவில்லை) ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். துன்பத்தில் தான் இன்பம் பிறக்கிறது. காந்தீயம் மூலம் பெற்றுக் கொண்டேன். உங்களுடைய சேவையானது இந்த உலகம் இருக்கும் வரை தொடர வேண்டும். அதை வருங்கால சந்ததியும் செய்யும் என நான் நம்புகிறேன். வாழ்க்கை என்பது ஒரு வட்டம் அதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆ.ஜீவவர்ணன்
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

## காந்தி அமைதி நிறுவனத்தினருடன் சந்திப்பு

சென்னையிலுள்ள காந்தி அமைதி நிறுவனத்தினருடன் எமது சங்க உறுப்பினர் ஆ.ஜெகநாதன் இந்தியா சென்ற போது சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார். அந்த நிறுவனத்தின் முக்கியஸ்தர் முனைவர் எஸ்.குழந்தைசாமி அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகள் குறித்துக் கேட்டறிந்து மகிழ்ச்சி அடைந்ததுடன் 'காந்தீயம்' பத்திரிகைக்கும் தனது பாராட்டுதலைத் தெரிவித்துள்ளார்.

காந்தி அமைதி நிறுவனம் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் காந்திய நெறியை பரப்பி வருகின்றது. அகிம்சை, சமாதானம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்து அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களை வெளியிடுவதும் இதன் பணியின் ஓர் அங்கமாகும். ஒரு பிங்குவின் கதை, மீண்டும் ஒரு பிங்கு, அமைதி வீரன் பிங்கு, பிங்குவின் புதுஉலகம் என்பன அவர்களின் தமிழ் வெளியீடுகளில் சிலவாகும்.

மாணவர்களுக்காக வெளியிட்ட சிறு நூல்களை முனைவர் எஸ்.குழந்தைசாமி அவர்கள் எமது காந்தி நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். காந்தி அமைதி நிறுவனத்தின் தொண்டு சிறப்படைய எமது சங்கமும் வாழ்த்துகின்றது.

# மாத்தளை மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டபம் 35 மில்லியன் ரூபா செலவில் மீள நிர்மாணிக்கப்படும்

1983 இன வன்செயலின் போது முற்றாக தீக்கிரையாக்கப்பட்ட மாத்தளை மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டபம் 35 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் உள்ளடக்கி "சர்வதேச மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டப"மாக மீளக் கட்டியெழுப்பப்பட உள்ளதாக மாத்தளை மகாத்மாகாந்தி சபை தலைவரும் களுதாவளை ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவரும் தொழிலதிபருமான எஸ்.சந்திரசேகரன் தெரிவித்தார்.

மகாத்மாகாந்தியின் சிரார்த்த தினம் 30.01.2008 அனுஷ்டிக்கப்பட்டது. அந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த சிரார்த்த தின விழாவில் மகாத்மா காந்தி சபை அங்கத்தவர்கள், காந்தி அபிமானிகள், மூவின சமூகங்களையும் சேர்ந்த நலன் விரும்பிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது, மகாத்மா காந்தி 1927 ஆம் ஆண்டு மாத்தளைக்கு விஜயம் செய்த போது பாக்கியம் தேசிய கல்லூரிக்கு அடிக்கல் நாட்டியதை நினைவூட்டும் வகையில் அமைக்கப்பட்ட இம்மண்டபத்தில் 1983 ஆம் ஆண்டு வரை பல்வேறு சமய,சமூகப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இருப்பினும் துரதிர்ஷ்டவசமாக 1983 இல் இடம் பெற்ற இன வன்செயலின் போது இம்மண்டபம் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டுவிட்டது.

இக்கட்டிடத்தை மீளக் கட்டியெழுப்ப பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தும் பயனளிக்காததையடுத்து மாத்தளை மாநகர பிதா முகம்மது ஹில்மி கரீமின் அனுசரணையுடன் இலங்கை - இந்தியா அரசாங்கங்களின் நிதியுதவியுடனும் வர்த்தகப் பிரமுகர்களினதும் சமூக நல விரும்பிகளினதும் நன்கொடைகள் மூலமும் மீளக்கட்டியெழுப்பப்படவுள்ளது. தற்போது நன்கொடைகள் மூலம் பெறப்பட்டுள்ள பத்து இலட்சம் ரூபா செலவில் முதல் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிவிரைவில் இம் மண்டபத்தை மீள கட்டி முடிக்க அனைத்து தரப்பினரிடமிருந்து நிதியுதவியும் பொருளுதவியும் எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

நன்றி :- தினக்குரல்
31.01.2008

# காந்தியைக் கொன்ற பாவிகளின் ஆட்சி மீண்டும் வந்து விடக் கூடாது

கம்யூனிஸ்டுகளுக்கு கலைஞர் கருணாநிதி அறிவுரை

மதவாதசக்திகளுக்கு எதிரான அணியில் பிணி ஏற்பட்டு விடக்கூடாது. மதவாத சக்திகள், பகுத்தறிவுக்கு விரோதமானவர்கள் இங்கு ஆட்சியைக் கைப்பற்றக்கூடாது. மதவெறி கூடாது. காந்தி அடிகளையே கொன்ற பாவிகளின் ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் மதவாத சக்திகளுக்கு இடம்தராத ஓர் ஆட்சி வேண்டுமென்று சொல்கிறேன்.

மக்களை மதவாதத்திலிருந்து மீட்க வேண்டும். மதவெறியிலிருந்து மீட்க வேண்டும். மதவாத சக்திகளுக்கு இடம் தரகூடாது. மீண்டும் ஒரு அயோத்தி, மீண்டும் ஒரு இராமரதம் ஏற்பட்டால் நாடு காடாகி விடும்.

சட்ட சபையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாத மத்திய அரசைக் கண்டிக்காத தமிழக அரசைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட்கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் வெளிநடப்புச் செய்தனர். அப்பொழுது கருத்து தெரிவிக்கும் போதே கருணாநிதி இவ்வாறு கூறினார்.

மூலம் :- 'தினக்குரல்' - 19.04.2008

"நான் எவரையும் சினந்து எழுதேன், எவரையும் கடிந்து எழுதேன். என்னுடைய விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்துவதற்காக என்னுடைய எழுத்துக்களைப் பயன்படுத்தமாட்டேன். ஒரே செய்திகளையே திரும்பத் திரும்பச் சொல்லி மக்களை நான் சலிப்புக் கொள்ளவிடேன். ஒவ்வொரு வாரமும் புதிய புதிய பொருள்களைத் தேர்ந்தெடுத்து எழுதி மக்களை இன்புறுத்துவேன்.

*1925 ஜுலை 2 'யங்இந்தியா'வில் காந்திஜி*

தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக ஒன்பது மணிநேரத்தைச் செலவிடும் மனிதன், வாரத்தில் ஒரு மணித்தியாலயத்தையாவது இறை நாம வழிபாடு மற்றும் பஜனை ஆகியவற்றிற்கு ஒதுக்குகிறார்கள் இல்லை. ஆன்மீகத்தைப் பின்பற்ற வேண்டும். ஆன்மீகம் இருந்தால் மாத்திரமே உலகில் வாழும் உரிமை மனிதனுக்கு உண்டு.

- காந்திப் பெரியார் பொ.கந்தையா
(ஸ்ரீமத் சுவாமி கெங்காதரனந்தா அவர்களின் ஆண்டுக் குருபூசையின் போது கூறியது)

# காந்தீயக் கல்வியை முன்னெடுக்க சங்கம் தீர்மானம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 6ஆவது நிர்வாக சபைக் கூட்டம் 19.02.2006 அன்று சங்கத்தின் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் சங்கப்பணிமனையில் இடம் பெற்றது.

செயலாளரினால் கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆ.வடிவேலு உபதலைவராக நியமிக்கப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக நிர்வாகசபை உறுப்பினராக ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவு செய்யப்பட்டதுடன் "காந்தீயம்" பத்திரிகை உதவியாளராகவும் நியமிக்கப்பட்டார்.

காந்தீயக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கென்று ஆ.சபாரத்தினம், கு.சண்முகநாதன், க.செல்வக்குமாரன் அடங்கிய மூவர் குழு நியமிக்கப்பட்டதுடன் இக்குழுவினர் நிர்வாக சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேசையா நினைவுப் பேருரை பற்றிய விடயம் கவனத்திற்கு எடுக்கப்பட்டு இதுவரை இது சம்பந்தமாக கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் அச்சிடப்பட வேண்டிய பேருரைப் பிரதிகளின் எண்ணிக்கை பற்றியும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் நடத்துவதற்குப் பொருத்தமான இடமாக யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி தெரிவு செய்யப்பட்டது. அத்துடன் அடுத்த 'காந்தீயம்' இதழில் நேசையாவின் சேவைகள் பற்றிய கட்டுரை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது.

சங்கச் செயற்பாடுகளுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ளல் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. காந்தி சேவா சங்க வங்கிக் கணக்குப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. கிளிநொச்சி அநாதைகள் பயிற்சி மையக் கணக்கு பற்றியும் அதனை இணைத்துச் செயற்படல் பற்றியும் தலைவரால் விளக்கம் அளிக்கப்பட்டது. அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட வேறு தீர்மானங்களாவன.

- அதிபர் க.செல்வக்குமாரனின் உதவியுடன் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தை களமாகப் பாவித்து காந்தீயக் கல்வியை முன்னெடுத்தல்.
- மில்க்வைற் பிரசுரங்களைப் பாதுகாத்தல்.
- காந்தீயவாதி வேலாயுதபிள்ளையின் படத்தைப் பணிமனையில் திரை நீக்கம் செய்தல்.
- காந்தீயத் தத்துவங்களைச் சிறுகதைகளாக்கி சிறுவர் வாசிக்க உதவுதல்.

## சிந்தனைக்கு!

காந்தியடிகளும் பிச்சைக்காரனும் உருவத்தில் மற்றவர்கள் பார்வையில் ஒத்தவர்களைப் போலக் காட்சி தரலாம். கையில் தடி, அரையில் முழங்காலுக்கு மேலே வேட்டி, மெலிந்த உடல். காந்திய எளிமையும்,பிச்சைக்காரனின் இல்லாமையும் ஒன்றல்ல. இரண்டுமே வேறு வேறு.

மூலம் :- "மல்லிகை"





மன்னார், லண்டன் ஸ்ரீகதை துர்க்கை அம்மன் இல்லத்தில் நடைபெற்ற சர்வதேச அகிம்சை தின நிகழ்வு

அக்டோபர் 2, 2007

# காந்தியின் கொள்கைகளை சிறுவர்களும் இளைஞர்களும் கடைப்பிடிக்க வேண்டும்

**கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர்**

மகாத்மா காந்தி கடைப்பிடித்த கொள்கைகளை எமது சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலச் சமூகத்தை சிறந்த சமூகமாகக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன் மகாத்மாகாந்தியின் 60 ஆவது நினைவு தின வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள சங்கப் பணிமனையில் சங்கத்தின் உபதலைவர் அ.இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் செல்வகுமாரன் மேலும் பேசுகையில் கூறியதாவது,

மகாத்மா காந்தி தனது வாழ்க்கையில் கடைப்பிடித்த சத்தியம், அன்பு, அஹிம்சை என்பவற்றை இன்றைய எமது சிறுவர்களும் இளைஞர்களும் கடைப்பிடிக்க வேண்டிய வழி வகைகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே எதிர்காலச் சமூகத்தை ஒழுக்க விழுமியங்களில் சிறந்த சமூகமாகக் கட்டியெழுப்ப முடியும்.

மகாத்மா காந்தி தனது அனைத்து செயற்பாடுகளையும் சொல்லால் அல்லாமல் செயலில் நடைமுறைப்படுத்தியவர். இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று செயற்பட்டவர். ஆங்கிலேயருக்கு எதிராக இவர் மேற்கொண்ட எதிர்ப்புப் போராட்டங்களால் ஆங்கிலேயர் வெறுப்படைந்த அதேவேளை பல ஆங்கிலத் தளபதிகளால் அன்றும் இன்றும் மதிக்கப்படும் ஒரு மகானாக அவர் விளங்குகின்றார்.

இவருடைய எளிமையான வாழ்க்கை அனைவரையும் கவர்ந்தது. ஏழை எளியவர்கள் ஆடைகளின்றிக் கஷ்டப்படுவதையும் கிராமப் புறங்கள் பொருளாதாரத்தில் கீழ் நிலைப்பட்டிருப்பதையும் கண்டு வருந்தி தனது மேலாடையைக் குறைத்துக் கொண்டவர்.

இவருடைய இந்தச் செயற்பாடு மேலைத் தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற ஆடைகளைப் பகிஷ்கரிப்பதனூடாக இந்தியாவின் கிராமியப் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்தது.

மகாத்மா காந்தியின் செயற்பாடுகளை புத்துயிராக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. இவரது பிறந்த தினம் மற்றும் நினைவு தினம் போன்றவற்றைப் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் சிறப்பாக உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதன் மூலமே அவருடைய சிறந்த சிந்தனைகளை அனைவரின் உள்ளத்திலும் விதைக்க முடியும்.

இதற்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது என்றார்.

காந்தியின் 60 ஆவது நினைவு தினத்தையொட்டி பருத்தித்துறை, கந்தரோடை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைகளுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.


அத்துடன் குடாநாட்டில் பல பாடசாலைகளிலும் சன சமூக நிலையங்களிலும் மகாத்மா காந்தியின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

நன்றி :- வீரகேசரி
02.02.2008

## அன்பர் தபால்

''காந்தீயம்'' நல்ல முறையில் வெளிவருகிறது. உயர்வான சிந்தனைகள், விடயதானங்கள். காந்தீயம் தான் பிறப்பெடுத்ததற்கான நோக்கங்களைச் செம்மையாகவும் சிறப்பாகவும் நிறைவு செய்து கொண்டிருக்கிறது. நடைமுறைச் சாத்தியமான போதனைகளே இன்று தேவை. காந்தியடிகளின் வாய்மை, சத்தியத்தைப் போதித்தால் அது மக்கள் மத்தியில் எடுபடும். அதன் மூலமே காந்தீயத்தை வளர்க்கலாம் என்பது எனது அபிப்பிராயம். கிராமங்கள் தோறும் பசுவழிபாட்டை ஊக்குவித்தால் விழா எடுத்தால் பசுவதை ஒழியும் பத்து மாணவர்களாவது சிந்தனைத் தெளிவு பெறுவர்.

செல்லப்பா நடராசா (J.P)
நெட்டிலைப்பாய்
கோண்டாவில்



திபெத்தில் சீன அரசு மேற்கொள்ளும் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கெதிராக இந்தியாவின் வட கிழக்கு நகரான சிகுரியில் (16.04.2008) புதன்கிழமை திபெத்திய பௌத்த பிக்குகள் மெழுகுதிரி கொளுத்தி போராட்டமொன்றை நடத்தினர். அந்த விழிப்புணர்வுப் போராட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா மற்றும் மகாத்மா காந்தியின் புகைப்படங்களுக்கு முன்பாக மெழுகுதிரிகளை ஏற்றுவதை இங்கு காணலாம்.

தினக்குரல் 2008.04.18

# அதிக சத்தம் சூழலை மாசுபடுத்துகிறது

வெற்றிக்கு நிமிர்ந்திருங்கள், நில்லுங்கள், ஆழ்ந்த மூச்சு, மூச்சுப் பயிற்சி, உயர்ந்த சிந்தனை, நல்ல குறிக்கோள், முயற்சி இவையும் தேவை. பின்வரும் உட்பகைகளை வெல்ல வெற்றி நிச்சயம், கொலை, களவு, பொய், விபச்சாரம், போதைவஸ்து, கோபம், காமம், பொறாமை, செருக்கு, பேராசை, உலோபித்தனம், மயக்கம்.

அதிக சத்தம் சூழலை மாசடையச் செய்வதனால் மனிதனுடைய பல உறுப்புக்களுக்கும் சிறிது சிறிதாக சேதம் ஏற்படுகின்றது. 80-85 டெசிபல் சத்தத்தை ஒருவர் தினம் 8 மணித்தியாலயத்திற்கு தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு கேட்பவராயின் அவருடைய கேட்கும் புலன் பழுதடையத் தொடங்குகின்றது. இதை அவரால் உணர முடியாது. ஆனால், விசேட காது டாக்டரினால் கண்டு அறிய முடியும். அதிக சத்தம் தூக்கத்தைக் கெடுக்கிறது. இதனால் நிம்மதி இழந்து வாழ்க்கையின் தரம் குறைகின்றது. ஆற்றல் குறைகின்றது. இது பெரும் இழப்பு. சத்த சூழலில் தொழில் புரிவோர்கள் காது நிபுணரைச் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்று அதன்படி நடப்பது அவசியம். காதுக்கு தீமை செய்வது காதைக் குடைதலும், அதிக சத்தம், வேண்டிய நேரத்தில் சரியான சிகிச்சை பெறாமையும் ஆகும். உ-ம் சீழ் வடிதல்.

கோயில்களிலும், பிற பொது இடங்களிலும் முக்கிய உறுப்பினர்கள் கோவில் தர்மகர்த்தா ஒன்றியத்தினர் காது டாக்டரின் ஆலோசனைகளைப் பெற்று சத்தங்களைக் குறைக்க ஆவன செய்யலாம். அதிக சத்தம் உள்ள போது மனம் ஒருமுகப்படுவது சிரமம். விழாக்காலங்களில் 5 நிமிடத்திற்கு ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் போட்டு விட்டு பின்னர் அளவான சத்தத்தில் பாவிப்பதற்கு பொலிசாரிடம் அனுமதி பெற வைக்க வேண்டும். வாகனங்களில் சங்கீதத்தை அளவான சத்தத்தில் போடுவோம். தேவையில்லாமல், வாகனத்தின் அளவான சத்தத்திலுள்ள கோணையும் பாவியாது இருப்போம். எங்கள் வானொலி, தொலைக்காட்சியை அளவான சத்தத்தில் ஒலிக்கவிட்டு, கேட்கும் புலன்களைப் பாதுகாப்போம். இங்கும், எங்கும் தயவு செய்து பொதுவாக இனிமையுடன் அளவாகப் பேசுவோம். வீட்டிலும் அமைதியான சூழலை ஏற்படுத்துவது குடும்பத்தினர் அனைவருக்கும் நன்மை பயக்கும். தொலைபேசியில் மெதுவாகப் பேசினால் நன்றாக விளங்கும். எனவே, தொலைபேசியிலும் மெதுவாகப் பேசுவோம். இதனால் சுற்றியுள்ள ஏனையோர்கள் தங்கள் வேலைகளை இடஞ்சல் இல்லாமல் செய்யலாம். தவிர்க்க முடியாத சில சத்தங்களையும் அதிக சத்தத்துடனான மோட்டார் சைக்கிள், லான்மாஸ்டர், ஆட்டோ, உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், லைட் இஞ்சின் போன்றவற்றை சமாளிக்க நவீன விஞ்ஞானம் வழிவகுக்கும். மேலும் சத்தங்களையும் சங்கடங்களையும் பற்றிய சரியான தகவல்களை காது நிபுணர் டாக்டரிடம் அறிந்து கொள்வோம்.

எல்லோரும் இன்புற்றிருக்க இறைவனும், நாமும் அன்புடன் உதவி செய்வோம். நேரத்தை வீணடிக்கும் டீ.வியை 4 மீற்றர் தொலைவிலிருந்து நல்ல பயனுள்ள நிகழ்ச்சிகளை மட்டும் அளவுடன் பாருங்கள். குழந்தைகள் கிட்ட இருந்து அதிக நேரம் பார்த்தால் சிலருக்கு கண்ணாடி போட நேரிடும். தொலைக்காட்சி பார்ப்பதைக் குறைத்து நல்ல நூல்களை வாசிப்பதும் வானொலியில் நல்ல பயனுள்ள நிகழ்ச்சிகளைக் கேட்பதும் பெரும் பயன் தரும்.

பிறஸ்சர், சலரோகம், இருதயநோய், பக்கவாதம் உள்ளவர்கள் மருந்துகளை முறையாகத் தொடர்ந்து எடுக்க வேண்டும். டாக்டர் மருந்துகள் தேவையில்லை என்றால் மட்டும் தவிர்க்கவும். ஆனால் பிறசரை, சலத்தில் சீனியை பிற பரிசோதனைகளை கிரமமாக மாதம் இருமுறை சோதித்து எழுதி வைத்து டாக்டரிடம் காட்டவும்.

கணவன்மார்கள் தங்கள் மனைவிகளைத் துன்புறுத்துவதையும், அடிப்பதையும் தவிர்க்க வேண்டும். இதனால் குடும்பப் பிரச்சினைகள் மிகவும் குறையும். சமுதாயம் முன்னேறும். திருக்குறளை நன்றாகப் படித்து ஒழுகினால் வெற்றியடையலாம்.

ஒவ்வொரு நிமிடத்தையும் நன்றாகப் பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம். செல்வந்தனாக, நேர்மை, கடின உழைப்பு, திருடாமை, சிக்கனம், வீண் செலவு செய்யாமை.

டாக்டர்.சிவசிவ (R.M.O)
B/22/3/4, சொய்சாபுர தொடர்மாடி
மொறட்டுவை

## சத்தியசோதனை

வாழ்க்கையின் தத்துவம்
போதித்தவர் பலர்
வாழ்ந்தே காட்டிய
உத்தமர் அவர்

ஒத்துழையாமை
ஆயுதம் ஏந்தி
உள்ளத்தில் நிலைபெறச்
செய்தார் சாந்தி

அஹிம்சை வழியில்
அவரது உறுதி
அகம் பாவத்திற்கு
அதுவே இறுதி

அன்னியர் ஆட்சியில்
சந்தித்த சோதனை
அனைத்தையும் வென்றே
படைத்தார் சாதனை

அவருக்குள் நிகழ்ந்தது
சுய பரிசோதனை
உலகுக்கு அளித்தார்
சத்திய சோதனை

பி.பி.அந்தோனிப்பிள்ளை
ஆத்திக்குளி
முருங்கன்

## காந்தீயம் பொது அறிவுக் களம்

1. மகாத்மாகாந்தியின் உருவம் பொறித்த தபால் தலையை முதன் முதலில் எந்த நாடு வெளியிட்டது?
2. முழுக்க முழுக்க மதுவிலக்கு பற்றிய பிரசாரப்படம் எது?
3. "ஆகஸ்ட் புரட்சி" என்றழைக்கப்படுவது எது?
4. "கருப்பு காந்தி" என்று அழைக்கப்படுபவர் யார்?
5. மகாத்மாகாந்தியின் தண்டி யாத்திரை எந்த இயக்கத்தைச் சார்ந்தது?
6. "மதம்" என்பது கொடிய போதைப் பொருள் போன்றது என்று கூறியவர் யார்?
7. 1889 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் எந்தப் பத்திரிகையை முதன் முதலில் வாரப்பத்திரிகையாக வெளியிட்டது?
8. தந்தை பெரியார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?
9. "என்னைவிடப் பகத்சிங்கிற்கு தேசபக்தி அதிகம்" என்று கூறியவர் யார்?
10. ''விஸ்வபாரதி'' பல்கலைக்கழகத்தை நிறுவியவர் யார்?

மேலுள்ள வினாக்களுக்கு விடைகளைத் தேடுங்கள். உங்கள் அறிவை வளர்ப்பதோடு பரிசில்களையும் வெல்லுங்கள். இறுதித்தினம் 30.07.2008. விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி.

பொது அறிவுக்களம்
ஆசிரியர்
"காந்தீயம்"
வாணி கணனிப் பதிப்பகம்
இல.61B, 1ம் குறுக்குத்தெரு,
வவுனியா.

## மகாத்மா காந்திக்கு பிரிட்டனில் சிலை

லண்டன் : பிரிட்டனிலுள்ள லெய்செஸ்டர் நகரில் காந்தி சிலையை அமைப்பதற்கு அந்த நகரசபை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நகரில் இந்தியாவில் உள்ள குஜராத் மாநிலத்தை சேர்ந்தவர்கள் அதிக அளவில் வசிக்கிறார்கள். அவர்கள் 12 அடி உயர காந்தி சிலையை அமைப்பதற்கு நகரசபையிடம் அனுமதி கேட்டார்கள். இதற்கு நகரசபை அனுமதி வழங்கவில்லை.

உள்ளூர் கதாநாயகரான காலபந்து வீரர் கேரிலைன்கர் மற்றும் மரபணுவை கண்டுபிடித்த சர்அலெக் ஜெப்ரீஸ் ஆகியோருக்கு சிலை வைக்க வேண்டும் என்று உள்ளூர்காரர்கள் கோரிக்கை வைத்தனர். காந்தி சிலை வைப்பதற்கான இயக்கத்துக்கு காந்தி படத்தை இயக்கிய ஆட்டன்பரோ உட்பட பல பிரபலங்களும் ஆதரவு வழங்கினர்.

இந்நிலையில் பல்வேறு சர்ச்சைகளுக்கு பிறகு கடைசியாக நகரசபை அனுமதி வழங்கியுள்ளது. 30 இலட்சம் ரூபா செலவில் இந்த சிலை அமைக்கப்படுகிறது.

**தினக்குரல் 2008.04.18**

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

"காந்தீயம்" பத்திரிகை தொடர்பான உங்களின் கருத்துக்கள் மற்றும் காந்திய நோக்கிலான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அவற்றின் பொருத்தப்பாடு, தரம் என்பவற்றின் அடிப்படையில் அவை பிரசுரிக்கப்படும்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினதும் "காந்தீயம்" பத்திரிகையினதும் 60வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு ஆண்டு மலர் ஒன்றினை வெளியிட எண்ணியுள்ளோம். சங்கத்தின் கடந்த காலப் பணிகளில் ஈடுபட்டும் அவை பற்றிய செய்திகளை தெரிந்தும் வைத்துள்ள பெரியோரிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். மேலும் சங்கத்தின் வெளியீடுகள், புகைப்படங்கள் போன்ற ஆவணங்களை சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அனுப்பி உதவினால் எமது பணிக்குப் பேருதவியாக இருக்கும்.

தொடர்புகளுக்கு:

**ஆசிரியர்**
**"காந்தீயம்"**
**வாணி கணனிப்பதிப்பகம்**
**இல.61B, 1ம் குறுக்குத்தெரு,**
**வவுனியா.**

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும்
திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா,
1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில்
2008ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர்: எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி